DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No. 613 /2021 |
| Deposition of witness | : | PW-2 |
| Name | : | பாபுதாஸ் |
| Father's /Husband Name | : | சோமசுந்தரம் |
| Village | : | மேலநத்தம் |
| Taluk | : | மன்னார்குடி |
| Age | : | 57 |
| Occupation | : | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 05th day August 2024.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது காவல்துறையில் பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 14.09.2021ம் தேதி பேரளம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது இவ்வழக்கின் எதிரியான ராஜீவ்காந்தி என்பவர் பேரளம் காவல் நிலைய குற்ற எண்.129/2017 சட்டப்பிரிவுகள் 147, 148, 294(பி), 506(2), 307 இதச என்ற வழக்கில் எதிரியாக இருந்த இவ்வழக்கின் எதிரியான ராஜீவ்காந்தி 10.12.2019-ம் தேதி மேற்படி குற்ற எண்.129/2017 தொடர்புடைய நன்னிலம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற வழக்குஎண். PRC. 06/2018 என்ற வழக்கில் பிணை மனு தாக்கல் செய்து அதில் நிபந்தனைக்குட்பட்டு பிணையில் சென்றவர் அந்த நிபந்தனைகளை பின்பற்றாமல் தலைமறைவாகி நீதிமன்றத்தில் சரிவர ஆஜராகாததால் 10.12.2019-ம் தேதி நன்னிலம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தலைமறைவாக இருந்த எதிரியை நான் சிறப்பு உதவி ஆய்வாளர் ரவி என்பவரை நியமித்து பல இடங்களில் தேடிப்பார்த்தும் கிடைக்காததாலும் ஆஜர் எதிரி தலைமறைவாக இருந்த காரணத்தினாலும் ஜாமீன் நிபந்தனையை மீறிய காரணத்தினாலும் அவர் இதச பிரிவு 229-A ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக அவர் மீது சிறப்பு உதவி ஆய்வாளர் ரவி என்பவர் அளித்த தனி அறிக்கை மீது பேரளம் காவல் நிலைய குற்ற எண்.976/2021 இத.ச பிரிவு 229-A னை பதிவு செய்து விசாரணை செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறக்கை **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிறகு வழக்கினை விசாரணை செய்த ரவி

என்பவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். விசாரணை முடிவில் எதிரியை இத.ச பிரிவு 229–A ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக தெரியவந்து அவர் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.